செய்தி வெளியீடு எண்:144 நாள்:14.2.2011

# செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் மாவட்ட மனநல சுகாதாரத் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், மன நோயாளிகளுக்கும், மனநோய் எளிதில் இலக்காகும் நபர்களுக்கும், சிறப்பான மருத்தவ சிகிச்சை ஆரம்ப சுகாதார நிலையம், தாலுக்கா மருத்துவமனைகள் மற்றும் அரசு தலைமை மருத்துவமனைகளில் அளிக்கப்பட்டு வருவதாகும். இத்திட்டம் அமுலாவதற்கு முன் மருத்துவ கல்லூரி மருத்தவமனைகளிலோ, பெருநகரங்களில் உள்ள மனநல மருத்துவர்களிடம் மட்டுமே சிகிச்சை பெற முடிந்தது. இதனால், அதிகமான பொருட்செலவும், நேரமும், உடன் வருபவர்களின் நேர இழப்பும், ஏற்பட்டு வந்தது. சிகிச்சையின் இடையே தவிர்க்க இயலாத காரணத்தால், தொடர் சிகிச்சை எடுக்க இயலாத நிலை இருந்து வந்தது. இத்திட்டம் அமுலாக்கிய பின்னர் மனநோயாளிகள் அதிக அளவில் தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகிலேயே சிகிச்சை பெற்றும், குணமடைந்தும் வருகிறார்கள். கீழ்காணும் மாவட்டங்களில் மனநல மருத்துவர்களுக்கு தொழில் நுட்ப உதவி அளிக்க தேவைப்படும் உளவியலாளர்கள் மற்றும் சமூக நலப்பணியாளர்கள் விபரம் வருமாறு:–

| | | |
|---|---|---|
| 1. மதுரை | : | உளவியலாளர் மற்றும் சமூக நலப் பணியாளர் பதவி. |
| 2. நாமக்கல் | : | சமூக நலப்பணியாளர் |
| 3. திருவாரூர் | : | சமூக நலப்பணியாளர் |
| 4. காஞ்சிபுரம் | : | சமூக நலப்பணியாளர் |
| 5. தேனி | : | உளவியலாளர் மற்றும் சமூக நலப்பணியாளர் |
| 6. திருச்சி | : | உளவியலாளர் மற்றும் சமூக நலப்பணியாளர் |
| 7. கன்னியாகுமரி | : | உளவியாளர் |
| 8. இராமநாதபுரம் | : | சமூக நலப்பணியாளர் |

இப்பணி முழுக்க முழுக்க தற்காலிகமானதாகும். தகுதிகள் மற்றும் தொகுப்பூதியம் கீழே தரப்பட்டுள்ளன.

–2–

ஊளவியலாளர் எம்.பில் (கிளினிக்கல் சைக்காலஜி) அல்லது எம்.ஏ அல்லது எம்.எஸ்ஸி (உளவியல்) இத்துறையில் ஆறுமாத பயிற்சி அனுபவம் மற்றும் சமூக நல ஊழியர் எம்.எஸ்.டபிய்ல்யூ/எம்.ஏ சமூக நலப்பணி மனநலம் பயின்றோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். வயது வரம்பு இல்லை. சொந்த மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

உளவியலாளர்களுக்கு மாத தொகுப்பூதியமாக ரூ.8000/– மற்றும் சமூக நல ஊழியர்களுக்கு மாத தொப்பூதியமாக ரூ.5000/–ம் வழங்கப்படும். விருப்பமுள்ளவர்கள் அவர்களது விண்ணப்பத்தினை 24.02.2011–க்குள் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு தங்களின் பெயர், பிறந்த தேதி, கல்வித்தகுதி, சொந்த மாவட்டம் சான்றிதழ்களை இணைத்து (ஜெராக்ஸ் நகல்) தொடர்பு கொள்ள வேண்டிய முகவரியை குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்,
(மத்திய மனநலத்திட்டம்) தொகுப்பூதிய பணியிடம்,
டி.எம்.எஸ்.வளாகம், தேனாம்பேட்டை, சென்னை–6.

வி.கே.சுப்புராஜ்,
அரசு முதன்மைச் செயலாளர்
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
*******

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச்செயலகம் ,
சென்னை.